For all Ceremonies
At your homes
Our Service available

OLI ILLAM

210, MAIN STREET,
(Near St. James Church)
JAFFNA.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

தரைப் பந்தல், கதிரைகள், சில்வர் கப், பீங்கான் இன்னும் பல உபகரணங்களை வாடகைக்கு பெற நாடுங்கள்

"ஒளி இல்லம்"

210, பிரதான வீதி,
(யாழ்ப்பாண ஆயர் ... அருகில்)
யாழ்ப்பாணம்

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 17 செவ்வாய்க்கிழமை (31 05 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 184

சந்திரிகா வெளியிடும் தகவல்:

மாகாணசபை எல்லைகளை மீளமைத்து தமிழர்களுக்குக் கூடுதலாக அதிகாரங்கள்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஸ்ரீ.ல.சு.க. தயாரிக்கும் திட்டம்

கொழும்பு, மே 31

இப்போதுள்ள மாகாண சபைகளின் எல்லைகளை மீள அமைத்து, தமிழ் மக்களுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்கி - இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுவருகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவரும், மேல் மாகாண சபையின் முதலமைச்சருமான திருமதி சந்திரிகா குமாரணதுங்கா இத்தகவலை வெளியிட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இத் தீர்வு தொடர்பாக தற்பொழுது தாங்கள் ஒரு வகையான யோசனையை தயாரித்துக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த யோசனைகள் குறித்துத் தமிழ்க்குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் —

சுதந்திரக் கட்சிக்கு தமிழ் மக்கள் மத்தியில் கூடிய நம்பிக்கை இருப்பது தமக்குத் தெரியும் என்றும் —

அரசாங்கத்தைவிட தமிழ் மக்களுடன் தாங்கள் நெருங்கிச் சென்று நல்லமுறையில் ஆலோசனை நடத்த இயலும் என்றும் — சந்திரிகா கூறியதாக வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது.

(அ-எ-6)

மைலாப்பூர் தொகுதி தேர்தலில் குளறுபடி!

முடிவு அறிவிப்பது நிறுத்தம்

சென்னை, மே 31

தமிழ்நாடு, மைலாப்பூர் சட்டசபைத் தொகுதி இடைத் தேர்தல் முடிவை உத்தியோகபூர்வமாக அறிவிப்பதை தேர்தல் ஆணைக்குழு ஒத்திவைத்துள்ளது.

இத்தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணுவதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறையீடுகளை விசாரிக்க துணைத் தேர்தல் ஆணையாளர் திரு. என். ஜி விஸ்வநாதனை தேர்தல் ஆணையாளர் நியமித்துள்ளார்.

வாக்குகள் எண்ணப்படுவது ஆரம்பமாவதற்கு முன்னர் வாக்குகள் இருந்த சீல்பெட்டிகள் திறக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன என்று எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறையிட்டுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சி கிழக்கில் ஞாயிறு இரவும் தாக்குதல்

வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில் குடத்தனை கடற்பகுதியில் இருந்து நேற்று முன்தினம் (ஞாயிறு) இரவும் கடற்படையினர் கரையோரப் பகுதிகளை நோக்கி கடும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

அப்பகுதிகளில் உள்ள மக்கள் இரவு வேளையில் பாதுகாப்புக் கருதி வேறு இடங்களுக்குச் சென்றுவிடுவதால் படையினரின் தாக்குதல்களினால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் ஹெலி ஒன்று வடமராட்சி கிழக்கு மற்றும் வடமராட்சியின் ஏனைய பகுதிகள் மீது பறந்து பலதடவை வட்டமிட்டுச் சென்றது.

(உ-5-15-155)

தேசியப்பட்டியல் எம்.பிக்கள் பதவி விலக விடாது மறுப்பு

கொழும்பு, மே 31

ஐ. தே. க. தேசியப்பட்டியல் எம். பிக்களான அலெக் றொபர்ட்ஸன், ஆர். ஏ. டி சிறிசேன காலிங்க, ஓபேவன்ஸ, ரெஜினால்ட் பெரேரா ஆகியோர் தாம் பதவி விலகப்போவதில்லை என்று தொடர்ந்து வற்புறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பதவி விலகும்படி தொடர்ந்தும் ஆளும் கட்சித் தலைமைப்பீடம் கொடுத்து வரும் அழுத்தங்களுக்கு இவர்கள் இன்னும் விட்டுக் கொடுக்காது இருந்து வருகின்றார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ-6)

ஜனாதிபதித் தேர்தல் ஒக்டோபர் இறுதியில்!

டி.பி. விஜேதுங்கா அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் மாத இறுதியில் அல்லது நவம்பர் முற்பகுதியில் நடைபெறும் என்று ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்ததாக 'வெரித்தாஸ்' வானொலி அறிவித்தது.

ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி வெற்றிபெற்றால் மட்டுமே 1995 பெப்ரவரி மாதத்தில் நடக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும் கட்சி வெற்றிபெற முடியும் என்றும் —

எனவே தேர்தலுக்கு முன்பாக கட்சியில் உள்ள பிளவுகள் சரி செய்யப்பட்டு அனைவரும் ஒருமித்து செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி விஜேதுங்கா கேட்டுக் கொண்டார்.

(உ-5)

யாழ். இந்துவில் பிற்பகலில் மாணவர் வரவு இல்லை

யாழ்ப்பாணம், மே 31

இரு நேரப் பாடசாலைத் திட்டத்தை ஆட்சேபித்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் நேற்று தமது பிற்பகல் வகுப்புகளுக்குச் செல்லவில்லை.

கல்லூரியின் அதிபர் கடமையில் இருக்கும் வரை பாடசாலையை ஒரு நேரமாகவே இயக்கி வந்தார் என்றும் —

இது குறித்து மாணவர்கள், மாணவ முதல்வர்கள், பெற்றோர்கள் ஆகியோருடன் அதிபர் கலந்துரையாடி பாடசாலையை இருநேரமாக இயக்குவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களையும், அதற்கு மாணவர்களின் எதிர்ப்பையும் புரிந்து கொண்டார் என்றும்

அதிபர் இடைக்கால விடுப்பில் (லீவில்) சென்றிருக்கும் போது கல்வித் திணைக்களத்தின் வற்புறுத்தலுக்கு இணங்கி பாடசாலையை இருநேரமாக இயக்க பிரதி அதிபர் உடன்பட்டிருப்பது அதிபரின் கருத்துக்கு மதிப்பளிக்காத செயல் என்றும் —

கல்லூரி மாணவர்களின் சார்பில் பிரதி அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால் தாங்கள் பாடசாலையை முழுநேரமாகப் பகிஷ்கரிக்கப் போவதாகவும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்திய அறிக்கை திருப்தியாக இருந்தாலே சிறிமாவோ போட்டி

இல்லையேல் சந்திரிகாவே ஜனாதிபதி வேட்பாளர்

மணிலா, மே 31

சமீபத்தில் அறுவைச் சிகிச்சைக்கு ஆளான எதிர்க் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது உடல் நிலையை மேலும் பரிசீலிக்க எதிர்வரும் 6 ஆம் திகதி சிங்கப்பூர் செல்லவுள்ளார் என்றும் —

அவரின் உடல்நிலை குறித்து டாக்டர்கள் திருப்திகரமான வைத்திய அறிக்கை சமர்ப்பித்தால் மட்டுமே அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்றும் —

அல்லது சிறிமாவோவின் மகளான சந்திரிகாவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் எனவும் செய்தி பிறந்துள்ளதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

சுழிபுரம் கடலில் 3 மீனவர் கடற்படையிடம் பிடிபட்டனர்!

2 பேரைக் காணவில்லை; மூவர் தப்பினர்

யாழ்ப்பாணம், மே 31

சுழிபுரம் கடற்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களில் மூவரை ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்று முன்தினம் இரவு பிடித்துச் சென்றனர்.

கடற்படையினரிடமிருந்து தப்புவதற்காக கடலில் பாய்ந்த மற்றைய ஐந்து மீனவர்களில் மூவர் கரை சேர்ந்தனர். இருவர் காணாமற் போயினர்.

காணாமற்போன இருவரும் உயிரிழந்திருக்கக்கூடும் என அஞ்சப்பட்டது.

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து சுழிபுரத்தில் வசித்த சின்னையா மயில்வாகனம் (வயது 40), சாமி ராஜவேல் (வயது 19), மாணிக்கம் மோகனதாஸ் (வயது 23) ஆகிய மூவருமே கடற்படையினரிடம் சிக்கியவர்களாவார்.

காரைநகரைச் சேர்ந்த கந்தையா அப்பன் (வயது 28), சுழிபுரத்தைச் சேர்ந்த கதிரமலை விக்னேஸ்வரன் (வயது 25) ஆகிய இருவருமே நீந்துவதற்காக கடலில் குதித்த பின்னர் காணாமற் போயினர்.

காரைநகரைச் சேர்ந்த சுப்பையா கோடீஸ்வரன் (வயது 27), தம்பு மோகன் (வயது 24), புவிதரன் (வயது 19) ஆகிய மூன்று மீனவர்களும் கடற்படையினரின் சுற்றிவளைப்பில் இருந்து தப்பி கரை சேர்ந்தனர்.

திருவடிநிலை ஆழ்கடல் பகுதியில் மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது காங்கேசன்துறைப் பக்கத்திலிருந்து வந்த கடற்படையினர் அவர்களை நெருங்கி பீரங்கித் தாக்குதலை நடத்திய வண்ணம் சுற்றிவளைத்தனர் என்றும் —

அப்போதே மூவர் படையினரிடம் சிக்கினர். என்றும் தெரியவந்தது

(உ-5-15-28)

ஹெலி நோட்டமிட்டுச் சென்றதும் கடற்படைப் படகு தேடி வந்தது

தப்பி வந்த மீனவர் தகவல்

யாழ்ப்பாணம், மே 31

"ஹெலிக்கொப்டர் ஒன்று எம்மை வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றதும் கடற்படைப்படகு தாக்குதல் நடத்திய வண்ணம் எம்மைத் தேடி வந்தது."

— நேற்று முன்தினம் இரவு சுழிபுரம் கடற்பகுதியில் கடற்படையினரிடம் இருந்து தப்பிப்பிழைத்துவந்த கோடீஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது அனுபவம் குறித்து கூறியதாவது:-

ஞாயிறு இரவு 10 மணியளவில் [illegible] கட்டுமரங்களில் தொழிலுக்குச் சென்ற நாங்கள் எட்டுப் பேர் [illegible] இல் கட்டுமரத்தை நிறுத்தி, மீன் பிடித்துக் கொண்டிருந்தோம்.

சுமார் 11 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று எம்மைச் சுற்றி வட்டமிட்டு பறந்து சென்றது.

பின்னர் அதிகாலை 1-30 மணியளவில் நாம் தொழில் செய்த இடத்தை நோக்கி படகு ஒன்று வேட்டுக்களைத் தீர்த்தவாறு நெருங்கி வந்தது.

நானும் விக்னேஸ்வரனும் அப்பனும் பயத்தினால் கடலில் பாய்ந்து நீந்த ஆரம்பித்தோம்.

எம்மை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. எமக்கு அருகில் குண்டுகள் [illegible] நான் பீதிகொண்டு மீண்டும் கட்டுமரத்தில் ஏற முயன்றேன். [illegible] படையினர் கட்டுமரத்தைச் சுற்றி வளைக்க முற்பட்டதும்(3 ஆம் பக்கம் பார்க்க)

இன்று தொடக்கம் கொடி எழல் வாரம்

தமிழீழ கல்வி மேம்பாட்டு நிதியம் இன்று 31 ஆம் திகதி தொடக்கம் ஜூன் 6ஆம் திகதி வரை கொடி எழல் வாரத்தை நடத்துகின்றனர்.

கொடி எழல் வாரத்தை பாடசாலை மாணவர்கள் கொண்டாடுமுகமாக துண்டறிக்கைகள், உண்டியல் ஒட்டிகள், சுவரொட்டிகள் கொடிகள் போன்றவற்றை தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் வழங்கியுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

மீனவரின் 50 என்ஜின்கள் கற்பிட்டியில் கொள்ளை!

கடந்த சனியன்று கற்பிட்டி, உச்சிமுனைத் தீவினுள் புகுந்த ஆயுததாரிகள் குழு ஒன்று, மீனவர்களுக்குச் சொந்தமான 50 என்ஜின்களையும் நான்கு மீன்பிடி வள்ளங்களையும் அபகரித்துச் சென்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்தக் குழு மீனவர் ஒருவரையும் கடத்திச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அபகரிக்கப்பட்ட உடைமைகளின் பெறுமதி சுமார் 32 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

இராணுவச் சீருடைக் குழு பொலனறுவவில் கொள்ளை!

கடந்த சனிக்கிழமை பொலன்னறுவையில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்குள் புகுந்த இனந்தெரியாதவர்கள் குழு ஒன்று, சுமார் 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதிவாய்ந்த உலர் உணவுப் பொருள்களையும் அபகரித்துச் சென்றதாக அறிவிக்கப்படுகிறது.

அக்குழுவில் இருந்தவர்கள் இராணுவச் சீருடையை ஒத்த உடைகளை அணிந்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

12 பேரைக் கொண்ட இக்குழு முதலில் மகாவலி கங்கையைக் கடந்து சென்று, அளுத்வெவ கிராமத்தில் வசிக்கும் ஒருவரைக் கடத்தியது என்றும் —

பின்னர் அந்த கிராமவாசியின் துணையுடன் பொலன்னறுவை புதிய நகருக்குள் பிரவேசித்து இக் கொள்ளையை நடத்தியிருப்பதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (உ-எ-6)

பிரேமா கொலைச் சம்பவம்:

அவரது குடும்பத்தவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம்

ஐ. ஜி. பியும், டி. ஐ. ஜியும் வழங்குவர்

கொழும்பு, மே 31

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா கொலை பற்றி எழுப்பப்பட்டுள்ள சந்தேகங்களுக்கு அவரது குடும்ப உறுப்பினர்களை பொலீஸ் மா அதிபரும் இரகசியப் பொலீஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபரும் சந்தித்து விளக்கமளிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாஸா கொலை குறித்து முறையான விசாரணையொன்றை நடத்த விசேட ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படி கடந்த 21 ஆம் திகதி பிரேமதாஸாவின் புதல்வி துலாஞ்சலி ஜனாதிபதி விஜேதுங்காவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அக்கடிதத்தின் பின்னரே அரசு பிரேமதாஸா குடும்பத்தினரைச் சந்தித்து விளக்கமளிக்க பொலீஸ் மா அதிபரை அனுப்புவது என்ற முடிவை எடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

இம்முறையும் எங்கும் "ராகிங்" சேஷ்டைகள்!

யாழ்ப்பாணம், மே 31

யாழ். பல்கலைக்கழகத்துக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மாணவர்கள் கடுமையான முறையில் "ராகிங்" வதைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

புதிய மாணவர்களுக்கான "ஜெல்ட்" ஆங்கில வகுப்புகள் யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளில் நடைபெற்று வருவது தெரிந்ததே.

இந்த வகுப்புகள் முடிவடையும் வேளையில் அப்பாடசாலைக்கு வரும் குழுக்களே இத்தகைய "ராகிங்" சேஷ்டையில் ஈடுபட்டு வருகின்றன.

நேற்று மாலை யாழ். இந்துக்கல்லூரி முன்றிலில் இத்தகைய 'ராகிங்' சம்பவங்கள் இடம்பெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

இத்தகைய நடவடிக்கை

(3 ஆம் பக்கம் பார்க்க)

கிளாலி- பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 31

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் அறையினர் அறிவித்துள்ளனர். (இ-5)

முச்சந்தி முரளி



சீதனப் பிசாசு மாதிரி ராகிங்கும் எங்களைப் பிடிச்ச ஒரு சாபக்கேடு பாருங்கோ......!

வயாவிளானில் சிப்பாய் பலி!

மணிலா, மே 31

வயாவிளான் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையே நேற்று முன்தினம் கடும் சண்டை நடந்ததாகவும் —

அதில் படையினரில் ஒருவர் உயிரிழந்ததாகவும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி "வெரித்தாஸ்" வானொலி அறிவித்தது.

(உ-5)

சின்னஞ் சிறு விளம்பரம்

தவறிவிட்டது

சபாபதிப்பிள்ளை இராஜேஸ்வரனுக்கு சொந்தமான 641332526V இலக்க அடையாள அட்டை 24-05-94 அன்று யாழ். மாநகரசபை எல்லைக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கலைமகள் வர்த்தக நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (31158)

உடன் தேவை

நல்ல நிலையிலுள்ள 15 KW மின் பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) ஒன்று உடனடியாக விலைக்குத் தேவைப்படுகிறது. தொடர்புகொள்ளவும்: சக்திப் பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி, தமிழீழம். (சி-8336)

மணமகன் தேவை

இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த வயது 42 மகம் 1ஆம் பாதம் சுருக்கெழுத்து, தட்டெழுத்து A/L படித்த பெண்ணுக்கு அரசாங்க உத்தியோகம் அல்லது சொந்த வியாபாரம் செய்யும் மணமகன் தேவை. தாரமிழந்தவரும் விண்ணப்பிக்கலாம். இல. 651, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (31134)

அக்கரைச் சீமையில்

ஆயிரம் பாத்திரங்களைப் படைத்த அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாவல். இங்கிலாந்து சென்ற எங்கள் இளசுகளின் கதை. வெளிநாடு செல்ல விரும்பும் பெண்கள் எல்லோரும் வாசிக்க வேண்டிய நாவல். (31610)

நெஞ்சக் கனகல்

குருநகர், மே 31

கோப்பாய் தெற்கு புனித மரியாள் ஆலய முன்றலில் இன்று செவ்வாய் இரவு 7 மணிக்கு யாழ். திருமறைக் கலா மன்றம் வழங்கும் ''நெஞ்சக் கனகல்'' (குறியீட்டு நாடகம்) மேடையேறும். (ஒ-51)

ஆலயங்களில்

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 8ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஒ)

★ ★ ★

மந்திகை கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று நடைபெறவுள்ளது. உற்சவத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சியாக இலப்பு விளையாட்டும் அங்கு இடம்பெறவுள்ளது. (உ-173)

பரீட்சை நிலைய மாற்றம்

நாளை ஆரம்பமாகும் ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சையின் சங்கீத, நடன செயன்முறைப் பரீட்சைக்கான நிலையம் ஒன்று மாற்றப்பட்டுள்ளது.

யாழ். வலயம் ஒன்றில் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையமே யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்று யாழ். வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தெரிவித்துள்ளார். (உ-5)

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
15
—
10
—
1936

மறைவு:
03
—
06
—
1991

அமரர் கந்தையா தியாகராஜா

(ஓய்வு பெற்ற M. L. T. தெல்லிப்பழை)

திதி: 31-05-1994

ஆண்டவன் அடிசேர்ந்து
ஆண்டுகள் மூன்று போனாலும்
துணையாகி நின்ற எம் தூண் சரிந்ததால்
துயரத்தில் மூழ்கி நித்தமும் கலங்குகிறோம் ஐயா!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உடுவில். (31149)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்:
08
—
04
—
1936

மறைவு:
01
—
05
—
1994

திருமதி இராசேஸ்வரி நாகராசா

(பபா)
(புங்குடுதீவு - 7)

இன்பத்திலும் துன்பத்திலும் இமயமாய் இருந்து எம்மை ஆளாக்கிய எம் தாயே! இன்பங்கள் பல ஒன்று கூடி வந்த இந்த வேளையில் எம்முடன் கூடி இன்புற்று இருப்பாய் என்றிருந்தோம். கொடிய நோய் உன்னைக் கொண்டு போனதோ அம்மா ஆண்டுகள் சென்றிடினும் ஆறாது எம் துயரம்.

எமது அன்புத் தாயாரின் மரணச் சடங்கிலும் 29-05 94ல் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியையிலும் இன்று (31-05-94)இல் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஏ. ஆர். எஸ்,
இருபாலை வீதி,
கோண்டாவில்.

(31168)

எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

அமரர் நடராஜா கனகேஸ்வரன்

அவர்கள்
(முன்னாள் அதிபர் பலாலி ஆசிரியர் கலாசாலை)

எமது கல்லூரிப் பழைய மாணவியும், பழைய மாணவர் சங்க இணைச் செயலாளராக முன்பு கடமையாற்றியவரும் தற்போது பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினருமான திருமதி சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவர் திரு நடராஜா கனகேஸ்வரன் அவர்கள் சிவபதமடைந்தமை குறித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/இராமநாதன் கல்லூரி.
சுன்னாகம்.

[சி-2095]

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L DAY CLASSES (8 30 – 2 00)
EVENING CLASSES (4 15 - 6 15)
SAT. SUN. CLASSES (8 00 – 2.00)

- மொத்தம் 9 பிரிவுகளில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
- வாராவாரம் Paper Class இலவசமாக நடைபெறுகின்றது.
- திறமையால் பிரபல்யமான திறமைமிக்க யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை.

(சி/8241)

நாடாளுமன்றச் செயலர் ஓய்வு

கொழும்பு மே 31

நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் நிஹால் செனவிரத்தினா நேற்று முன்தினம் தமது பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது. புதிய செயலாளர் நாயகமாக திரு. தித்தவெல நியமிக்கப் பட்டுள்ளார். (உ-எ-6)

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்
நடத்தும்
கருபுலிகள் நாளையொட்டிய

அரங்க விழாவும், கிராமிய ஆட்ட கலை விழாவும்

05 - 07 - 1994 அன்று நடைபெறவிருக்கும் கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் மாவட்டங்கள் மட்டத்தில் நடத்தவிருக்கும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் அமைப்புக்கள், தனிநபர்களுக்கான விதிமுறைகளை கீழே வகைப்படுத்தித் தருகின்றோம்.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்களும், கோட்ட மட்டத்திலான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக செயலகங்களில் 02 - 06 - 1994க்கு முன்னதாக நேரில் கையளிக்கப்பட வேண்டும்.

அரங்க வகைகளும் போட்டி விதிமுறைகளும்

1. பாரம்பரிய அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக கூத்து, இசைநாடகம், வரலாற்று நாடகம், இலக்கிய நாடக வடிவங்களைக் கொண்டவையாக இவை அமையும்.
2. நவீன அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக இயல்புநெறிவாதம், யதார்த்தவாதம், மோடிமை, குறியீட்டுத்தன்மை கொண்டவையாக இவை அமையும்.

பொது அறிவுறுத்தல்கள்

1. கலை வடிவங்களின் கருப்பொருள் சமகாலப் பிரச்சினைகள், நிகழ்வுகளை ஒட்டியதாகவும், கலை அம்சம் நிறைந்ததாகவும் எமது விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.
2. நாடகம் 45 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும். (ஐந்து நிமிட விலக்கு மட்டும் அனுமதிக்கப்படும்.)
3. (அ) சிறந்த நடிகர்
   (ஆ) சிறந்த நடிகை
   (இ) சிறந்த நெறியாள்கை
   (ஈ) சிறந்த எழுத்துரு
   (உ) சிறந்த இசையமைப்பு
   (ஊ) சிறந்த வேடப்புனைவு
   என்பவற்றிற்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.

சிறுவர் அரங்கு

சிறுவர்களின் வயதிற்கும் உளவளர்ச்சிக்கும் அமைவாகக் கருப்பொருள் அமைய வேண்டும்; அத்துடன் நாடக அளிக்கையில் சிறுவர்களே பங்குகொள்ள வேண்டும். பின்னணி வாத்தியக் கருவிகளை மட்டும் பெரியோர் கையாளலாம்.

பொது அறிவுறுத்தல்கள்

(அ) நாடக அளிக்கையில் ஆறு தொடக்கம் பன்னிரண்டு (6—12) வயது வரையுள்ள சிறுவர்கள் கீழ்ப்பிரிவிலும், 13 தொடக்கம் 17 வயது வரை உள்ளவர்கள் மேற்பிரிவிலும் அடங்குவர்.

(ஆ) கீழ்ப்பிரிவு நாடகம் 30 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
3 நிமிட விலக்கு மட்டும் அனுமதிக்கப்படும்)

(இ) மேற்பிரிவின் நாடகம் 30 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
(5 நிமிட விலக்கு மட்டும் அனுமதிக்கப்படும்)

(ஈ) சிறுவர் நாடகங்களை பாடசாலைகளோ, தனிநபர்களோ, அமைப்புக்களோ தயாரிக்கலாம்.

(உ) நாடகங்களில் பங்கேற்கும் சிறுவர்களின் வயதெல்லை பாடசாலைகளாயின் பாடசாலை அதிபர்களும், தனிநபர் தயாரிப்பு அல்லது அமைப்புக்களின் தயாரிப்புக்களாயின் அப்பகுதி கிராம சேவகரும் உறுதிப்படுத்த வேண்டும்.

(ஊ) நாடக அளிக்கையில் பங்குகொள்ளும் சிறுவர்களின் எண்ணிக்கை 15க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

கிராமிய ஆட்டக் கலைப் போட்டிகள்

1. கோலாட்டம்
2. கரகம்
3. ஆட்டக்காவடி
4. கும்மி

பொது அறிவுறுத்தல்கள்

(அ) இவை ஒவ்வொன்றும் 10 நிமிடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

✻ குறிப்பு

(அ) ஒவ்வொரு போட்டியிலும் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று தெரிவுகளுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

(ஆ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

(இ) தயாரிப்புக்களுக்கான செலவுகளையும், போக்குவரத்துக்கான செலவுகளையும் தயாரிப்பவர்களே பொறுப்பேற்க வேண்டும். மாவட்ட மட்டத்திலான போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படும் தயாரிப்புகளுக்கான போக்குவரத்து வசதிகளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பொறுப்பேற்கும்.

(ஈ) மேடையேற்றப்படாத புதிய நாடகங்களும், கிராமிய ஆட்டக் கலைகளும் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

(உ) மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் அந்தந்த கோட்டக் கலை, பண்பாட்டுக் கழகச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்,
நடுவப் பணியகம்,
தமிழீழம்,

யாழ். பெஸ்கி சனசமூக நிலைய
புலேந்திரன் பாலர் பாடசாலை

விளையாட்டுப் போட்டி

காலம்: இன்று (31 - 05 - 1994)
செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணி
இடம்: நிலைய முன்றில்

பிரதம விருந்தினர்:
திரு பா. செல்வரெட்ணம் அவர்கள்
(சர்வோதயம் மாவட்ட இணைப்பாளர்)

சிறப்பு விருந்தினர்கள்:
அருட்திரு சாள்ஸ் கொலின் அடிகளார்
(புனித ஆரோக்கியநாதர் ஆலய பங்குத் தந்தை)
திரு. மூர்த்தி அவர்கள்
(கடற் புலிகளின் அரசியல் நிர்வாகப்-பொறுப்பாளர்)
செல்வி க திலகராணி
(சிறுவர் பகுதி பொறுப்பாளர் சர்வோதயம்)

இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- நிலையக் குழுவினர்.

விழா சிறப்புற வாழ்த்துபவர்:

வில்லியம் வெதுப்பகம்

583, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

[31177]

3ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்:
19
—
03
—
1932

மறைவு:
31
—
05
—
1991

அமரர்

டாக்டர் J.P.C. பிலிப்ஸ் (M.B.B.S)

(J. P. All Ceylon)
(உரிமையாளர்: பிலிப்ஸ் நர்சிங் ஹோம்)

ஆயிரம் நாட்கள் கடந்தாலும்
ஆறாது நம் துயர் – நின்
ஆத்ம ஈடேற் றத்திற்கு
அன்புடன் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள்,
டாக்டர். நர்சிங் ஹோம் ஊழியர்கள்.

28, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[31173]

இப்போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் கீழ்வரும் மாதிரிப் படிவத்தை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கவும்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்
நடத்தும்
கரும்புலிகள் நாளையொட்டிய

அரங்க விழாவும் கிராமிய ஆட்டக் கலை விழாவும் விண்ணப்பப்படிவம்

1) பங்குபற்றும் அமைப்பின் பெயர்:
....
....

2) முகவரி:
....
....
....
....

3) கோட்டத்தின் பெயர்:
....
....

4) நாடகத்தின் தன்மை:
அ: ....
ஆ: ....
இ: ....
ஈ: ....

5) கிராமிய ஆட்டக்கலை:
அ: ....
ஆ: ....
இ: ....
ஈ: ....

இப்போட்டிகளின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளுகின்றேன் என்பதை அறியத்தருகின்றேன்.

....
விண்ணப்பதாரரின் கையொப்பம்

(சி-8307)

உதயன்
193/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

தமிழர் கைதுகளின் நோக்கம் என்ன?

தமிழர்களைக் கண்டபடி கைதுசெய்து காவலில் வைக்கும் நடவடிக்கையில் கொழும்புப் பகுதிப் பொலீஸார் மீண்டும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். அதே போன்று நீர்கொழும்புப் பகுதிக்கு உறவினர் வீடுகளுக்குச் செல்லும் தமிழர்களையும், அங்கு அவசர அலுவல்களுக்காகச் செல்லும் தமிழர்களையும் அப்பகுதிப் பொலீஸார் கைது செய்கின்றனர்.

கொழும்பில் அசம்பாவிதம் எதுவும் நடக்கும்போதுதான் ஒரு பருவகால செயற்பாடு போலத் தமிழர்கள் கைது செய்யப்படுகிறார்கள் என்று பலரும் நினைத்துக்கொள்கின்றனர். அதுவல்ல உண்மை நிலை:

கடந்த ஒரு வருட காலத்துக்கு மேலாகவே பொலீஸார் தமது கைது நடவடிக்கைகளை இடைவெளி விடாது தொடர்ந்த வண்ணமே இருக்கின்றனர்.

இக் கைதுகளின் முக்கிய நோக்கம் பொலீஸார் சம்பளத்துக்கு மேலதிகமாகக் ''கிம்பளம்'' தேடுவதற்காகவே என்பது உண்மையானாலும், அரசாங்கம் இது விடயத்தில் பார்த்துக்கொண்டிருப்பதில் உள்நோக்கம் வேறு ஒன்று உள்ளது.

பாதுகாப்புக் காரணங்களை கருதி சந்தேகத்துக்கு உரியவர்களையே கைது செய்கிறோம் என்று கூறி அப்பாவித் தமிழர்களை காவல் நிலையங்களில் அடைத்த பொலீஸாரால், அவர்களில் எத்தனை பேரைப் பாதுகாப்புக்குக் குந்தகமானவர்கள் என்று இனம் காண முடிந்தது?

ஒன்பது பேரைப் பிடித்து அடைத்துத்தான், அவர்களை அடித்துத்தான் பத்தாவது நபரைத் தீவிரவாதி என்று நிரூபிக்கமுடியுமா? சிங்களவர்கள் பாதுகாப்புக்குக் குந்தகமாக நடக்கும் போதெல்லாம், இத்தகைய போக்கைத்தான் பொலீஸார் கடைப்பிடிக்கிறார்களா? அதனை அங்கீகரிக்க அல்லது அதற்குத் துணை போக அரசு சம்மதிக்கிறதா?

தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் என்பதனை நிலைநாட்டவே அரசு எப்போதும் விரும்புகிறது. அதன் சகல செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் அந்த அடிப்படையிலேயே அமைந்து வருகின்றன. அதே போன்று தமிழர்கள் சந்தேகத்துக்கு உரியவர்கள் என்ற புதிய ஒரு கருத்தையும் நிலைநிறுத்த அரசு விரும்புகிறது.

அதனாலேயே கொழும்பு, நீர்கொழும்பு போன்ற தென்னிலங்கைப் பகுதிகளில் அப்பாவித் தமிழரைப் பொலீஸார் இம்சைப்படுத்துவதற்கு அரசு அனுமதி வழங்குகிறது. தமிழர்களுக்கு சுதந்திரமும் இல்லை; பாதுகாப்பும் கிடையாது என்று மறைபொருளாகக் காட்ட முனைகிறது.

தேர்தல்கள் நெருங்குகின்றன. எந்தச் சிங்களக் கட்சி வெல்வதானாலும் தமிழர்களின் வாக்குகள் தேவை. அவையே வெற்றியைத் தீர்மானிக்கும் வாக்குகளாகவும் அமையப் போகின்றன. நிலைமை இவ்வாறிருக்கும் போதும், தெற்கில் வாழும் தமிழர்களை இம்சிக்கவும், தற்கொலை செய்யத் தூண்டவும் பொலீஸார் செயற்படுவதை அரசு அனுமதிக்கிறது என்றால், அதன் அர்த்தம் யாது?

தமிழர்கள் அவர்களது தாயகத்தில் வாழ்ந்தால் மட்டுமே அவர்களைக் கொல்வோம் என்பதல்ல. ஸ்ரீலங்காவில் எங்கு வாழ்ந்தாலும் அவர்களை அழிப்பதே எமது இலக்கு என்பதனை அரசு வெகு தெளிவாகக் கூறுகிறது என்பதேயாகும்.

இதனைப் புரியாமல்தான், தாயக மண்ணை விட்டோடி கொழும்பில் வாழ்வது பாதுகாப்பு என்று கருதி இன்னமும் பலர் அங்கு சென்று கொண்டிருக்கின்றனர்!

தேர்தலுக்குப் பின்னர், சிலவேளை தேர்தலின்போது கூட, கொழும்பு வாழ் தமிழர்கள் அரச மரணப்படைகளாலும், குண்டர் படைகளாலும் வேட்டையாடப் பட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. அதற்கு முன்னோடியாக இடம், ஆள் அறியும் உத்தியாகவே தமிழர் கைது தொடரப்படுகிறது என்று கருதின் தப்பு ஏது?

ஈராக் பிரதமர் ஹஸ்மட்டை பதவி நீக்கினார் சதாம்!

கருத்து வேறுபாடு காரணம்?

பக்தாத், மே 31

ஈராக் பிரதமர் ஹஸ்மட் ஹுசேன் ஜனாதிபதி சதாம் ஹுசேனால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

பிரதமர் பதவியையும் ஜனாதிபதியே இனிவகிப்பார் என்று பக்தாத் அரசு பின்னர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி முற்றிவருவதைத் தொடர்ந்தே ஜனாதிபதி சதாம் ஹுசேன்; பிரதமரை 'டிஸ்மிஸ்' செய்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே தீவிர கருத்து வேறுபாடு ஏற்பட்டதைத் தொடர்ந்தே, ஆட்சியைத் தனது பூரணக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கு முகமாகவே சதாம் ஹுசேன் பிரதமர் பதவியையும் தாமே ஏற்றுக் கொண்டிருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர். (ஓ-எ)

யுத்தம் முடிவுக்கு வந்தால் நொறாட் உதவி அதிகரிக்கும்

பணிப்பாளர் நாயகம் தகவல்

கொழும்பு, மே 31

வடக்கு — கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் பட்சத்தில் நொறாட் ஸ்தாபனத்தினால் இலங்கைக்கு வழங்கப்படும் நிதி உதவியை மேலும் பன்மடங்காக அதிகரிக்க முடியுமென நொறாட் ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நொறாட் ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் சேர் கிறிஸ் ராபர் தற்போது இலங்கை வந்துள்ளார்.

நொறாட் ஸ்தாபனம் ஆண்டு தோறும் 4 கோடி 50 லட்சம் நோர்வே ஜியன் குறோணர் நிதி உதவியை இலங்கைக்கு வழங்கிவருகிறது. (எ-162)

உதவிப்பணம் வழங்குதல்

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பொது மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான சித்திரை மாதக் கொடுப்பனவுகள் தற்சமயம் சுழிபுரம் தபாலகத்தில் அமைந்துள்ள காரைநகர் அஞ்சலகக் கிளையிலும், வண்ணார்பண்ணை உப அஞ்சலகத்திலும், யாழ்ப்பாணம் அஞ்சலகத்தில் உள்ள ஊர்காவற்றுறை அஞ்சலகத்திலும் கைதடி, விடத்தல்பளை உப அஞ்சலகத்திலும் வழங்கப்படுகின்றன.

காசநோய், தொழுநோய், புற்றுநோயாளருக்கான உதவிப் பணமும் தற்போது வழங்கப்படுகின்றது. (எ-111)

அமைச்சர்கள், எம். பிக்களின் நடவடிக்கைகள் கண்காணிப்பு!

அமைச்சர்கள், அரச எம். பிக்கள் மற்றும் அரச உயர்நிலை அதிகாரிகளின் நடவடிக்கைகளை ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு மிகவும் நெருக்கமான அதிகாரிகள் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி த ஐலண்ட் பத்திரிகை மேற்கண்ட தகவலை வெளியிட்டது.

இதே வேளை — றொனி டி மெல் மீண்டும் எம்.பியாகும் பட்சத்தில் அவருக்கு நிதி அமைச்சர் பதவியை வழங்குவதில்லை என்ற முடிவை, ஜனாதிபதி விஜேதுங்கா தமது உயர்நிலை ஆலோசகர்களுடன் கலந்து பேசிய பின்னரே எடுத்தார் என்பது இப்போது தெரிய வந்துள்ளது. (ஓ-எ)

பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஏற்பாட்டிலான

மீன்பிடியியல் கற்கை நெறிபயிற்சி; 90 பேர் நிறைவு செய்தனர்

யாழ்ப்பாணம், மே. 31

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவில் யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகினால் கடந்த இரண்டு மாதங்களாக நடத்தப்பட்டு வந்த மீன்பிடியியல் அடிப்படை கற்கைநெறியில் சேர்ந்து படித்த 90 பேர் தங்கள் பயிற்சியை முடித்துக் கொண்டனர்.

பயிற்சியை முடித்துக் கொண்டவர்களைப் பாராட்டும் நிகழ்ச்சியாக, அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கேணல் கிட்டு நினைவு மண்டபத்தில் மீன்பிடியியல் கற்கைநெறி நிறைவு விழா நடத்தப்பட்டது.

அதில் கலந்து கொண்டு பேசிய திரு. வே. பாலகுமாரன் ''கடலில் நாளாந்தம் போராட்டம் நடக்கின்றது. கடலின் தன்மை, கடலில் நடக்கும் போராட்டம் எல்லாருக்கும் தெரியாது. கடலன்னையின் மடியில் உள்ளவர்களுக்குத்தான் தெரியும். மக்களின் வாழ்வு போராட்டமாக மாறி வருகின்றது. இது கடலில் நடக்கும் போராட்டமாக உள்ளது. மக்கள் புதிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்'' — என்று சொன்னார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் பேசுகையில் — ''வளம் நிறைந்த எமது தேசத்தில் பொருண்மியபலம் நிறைந்த தாயகம் கட்டியெழுப்ப வேண்டும். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் இனங்காணப்பட்டுள்ளன. வளங்களை உச்சமாகப் பயன்படுத்த பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. பல முன்னோடித்திட்டங்கள் வெற்றியளித்துள்ளன. இதன் மூலம் பெருமளவு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன'' — என்று தெரிவித்தார்.

கடல்வளம் முழுமையாகப் பயன் படுத்தப்படவில்லை. தமிழ் சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட சிறு எண்ணிக்கையாளருக்கு மட்டுமே பயன்பட்டு வந்த எமது பல்கலைக்கழகம் இன்று எல்லோருக்கும் பயன்படக்கூடியதாக திறந்துவிடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

கடல்வளம் பெற்றவர்கள் சங்கங்கள், மக்களுடன் இணைந்து கடல் வளத்தின் உச்சப் பயன்பாட்டிற்குக்கூடிய பங்காற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையும் பயிற்சி பெற்ற மாணவர்களும் பேசினர். (எ)

நாம் விரும்புகின்றோமோ இல்லையோ விடுதலைப் புலிகள் தேசிய இயக்கமே!

முன்னாள் ராஜதந்திரி கருத்து

இலங்கை ராஜதந்திர சேவையில் பணியாற்றியவர். ஜனாப் இஸத் ஹுசேன் இவர் பிலிப்பீன்ஸில் இலங்கைத் தூதராகவும் பணியாற்றி தற்போது ஓய்வுபெற்றுள்ளார்.

இவர் சமூக நீதி (சோஷல் ஜஸ்டிஸ்) என்ற ஆங்கில சஞ்சிகையில் (மே இதழ்) 'ஜனாதிபதி பிரேமதாஸா மறைந்து ஓராண்டின் பின்னர் என்ற தலைப்பில்'' எழுதிய கட்டுரையில் இருந்து சில பகுதிகள் வருமாறு:

முன்னர் இருந்த அரசாங்கங்கள் போலல்லாது, தற்போதைய அரசாங்கம் நாட்டின் இனப்பிரச்சினையே இல்லை என்று சொல்கிறது. அப்படியானால் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுவதற்கான ஆரம்ப நிலையே இல்லை என்பதுதான் அதன் அர்த்தமாகிறது.

அரசாங்கம் இந்த நிலைப்பாட்டுக்குக் காட்டும் காரணங்கள் புதுமையானவை அவற்றில் ஒன்று விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் என்பதாகும்.

இப்போது விடுதலைப் புலிகள் பயங்கரவாத நடைமுறைகளைக் கையாளுகிறது என்றாலும், ஜப்பானின் செம்படை அல்லது இத்தாலியின் பேடர் மெய்ன்ஹொப் ஆகிய கோஷ்டிகளுடன் அதனை ஒப்பிட முடியாது.

நாம் விரும்புகின்றோமோ, இல்லையோ விடுதலைப் புலிகள் ஒரு தேசிய இயக்கமாகும்.

குடியேற்ற அல்ஜீரியாவில் போரிட்ட எப். எல். என். (FLN) இயக்கம் போன்றதே விடுதலைப் புலிகள் இயக்கமாகும். எப். எல். என். அமைப்பும் பயங்கரவாத முறைகளைக் கையாண்டது.

ஐ. தே. க. அரசுகளின் பயங்கரவாதங்கள்

பயங்கரவாத முறைகளைக் கையாளுவதால் ஓர் இயக்கம் அல்லது அமைப்பு பயங்கரவாதமான இயக்கமாகிவிடாது.

1977க்குப் பின்னர் பதவியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்கள் எல்லாம் மக்கள் மீது அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டன. இவ்வரசாங்கங்கள் பயங்கரவாத அமைப்புக்கள் அல்லவே.

இச்சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட உண்மை [illegible] வாதத்தைக் கையாளும் அமைப்பு எல்லாம் [illegible] வாத அமைப்பாகி விடாது என்ற உண்மையை தெளிவாக்குகிறது.

முன்னைய ஏகாதிபத்திய வல்லரசுகள் எல்லாம் சுதந்திரத்துக்காகப் போராடும் தேசிய இயக்கங்களை எல்லாம் வெறும் பயங்கரவாத அமைப்புக்களாகத்தான் கருதி வந்தன.

விடுதலைப்புலிகள் பற்றி இன்றைய அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாட்டிலும் குடியேற்ற காலத்து மனப்பாங்குதான் மணக்கிறது.

போலியாக வாதாட முடியும்

சிங்களவர்களும் தமிழர்களும் அமைதியாக வாழ்ந்து வருகின்றார்கள்; அதனால் இனப்பிரச்சினை இல்லை என்று அரசு கூறுகிறது. சிங்கள மக்கள் அனைவரும் பேரினவாதிகள் அல்லர். இனவாதிகள் அல்லர் ஆகவே மக்கள் மட்டத்தில் இனப்பிரச்சினை இல்லை என்று போலியாக நாமும் வாதாட முடியும்.

ஆனால் அரசாங்க மட்டத்தில் இனப்பிரச்சினை இருக்க முடியும்.

ஒரு விஷயம் தற்போதைய [illegible] பயங்கரவாத [illegible] 1977 [illegible] எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதத்தினால் உருவாக்கப்பட்டதொன்றாகும்.

இன்னொரு விஷயம் அரசாங்கத்தை நம்ப முடியாததால்தான் இனப்பிரச்சினை நீடிக்கின்றது.

தமிழருக்குச் சமத்துவம் கொடுக்கப்படுகிறது. கொடுக்கப்படும் என்று நாம் வாதாட முடியும். அப்படியானால் அவர்கள் ஏன் அதிகமாகக் கேட்கிறார்கள். இதற்குப் பதில்— அரசாங்கம் எல்லா விஷயத்திலும் கொடுத்த வாக்கைக் காப்பாற்றாது என்பது தான்.

அதனால்தான், விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமல்ல, சகல தமிழ்க் கட்சிகளும், சமஷ்டி அரசமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு இணைப்பு மூலமாக அமைப்பு ரீதியான பாதுகாப்பை வலியுறுத்துகின்றன.

—இவ்வாறு அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது; (ஓ-எ)

புலிகளின் குரல் வானொலியில்

31 - 05 - 1994
செவ்வாய் இரவு
★ 8-01 — [illegible] ஒலிமாலை
★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள் — தகவற் களஞ்சியம்
★ 8-20 — நலந்தானா — நிகழ்ச்சியில் புகைத்தலினால் ஏற்படும் தீங்குகள் பற்றிய ஆலோசனைகள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துக்களம் — ''கட்டுப்பாடு''
★ 8-50 — களமும் காவியமும் — அன்று எம். கருவிகாத்தவன் இன்று சிலையாகிப் போய் விட்டான்

01 - 06 - 1994
புதன் காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

நாளை

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பளை பிரிவினரால் முகமாலைப் பகுதியில் மகளிர்குழு அமைப்பது தொடர்பான கூட்டம் ஒன்று நாளை பிற்பகல் 3 மணிக்கு முகமாலை றோ. க. பாடசாலையில் நடைபெறவுள்ளது. (உ-5-117)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக ஆங்கில மன்றத்தின் வெளியீடான ''மூன்றாவது கண்'' ஆங்கில சஞ்சிகையின் வெளியீட்டு வைபவம் நாளை பிற்பகல் 3 மணிக்கு புவியியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

''ஆங்கிலத்தில் சிறுசஞ்சிகைகளின் தேவை என்ற தலைப்பில் திரு. வி. ராஜாபிள்ளையும்—

''தமிழில் சிறு சஞ்சிகைகள்'' என்ற தலைப்பில் திரு. ரி. குலசிங்கமும் அங்கு உரையாற்றுவர். (உ-5-69)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மாணவர் மன்றத்தினால் ஜி. சி. ஈ. உயர்தர வர்த்தக மாணவர்களுக்காக நடத்தப்படும் கருத்தரங்கின் இரண்டாவது தொடர் நாளை பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

கணக்கியல், பொருளியல், வர்த்தகம் ஆகிய பாடங்களில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அதில் விரிவுரை வழங்கவுள்ளனர்.

★ ★ ★

வடமராட்சி பகுதி பாடசாலைகளில் கடமையாற்றும் ஆங்கிலப்பாட பயிலுநர் ஆசிரியர்களுக்கான சந்திப்பு ஒன்று நாளை புதன் பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-173)

மிரட்டல் அரசியல் நடத்தும் ஐக்கிய தேசியக் கட்சியினர்

சு. க. எம். பி. குற்றச்சாட்டு

கொழும்பு, மே 31

ஜனநாயகம் பற்றி பேசும் ஐக்கிய தேசியக் கட்சியினர் தங்களின் தேசியப்பட்டியல் எம். பிக்களை அகற்றுவதற்கு மிரட்டலைக் கையாளுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி. மஹிந்த ராஜபக்ஷ இப்படிக் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

மிரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஐக்கிய தேசியக் கட்சியினர் தற்கொலை செய்து கொள்ளும் காலம் வெகு தொலைவில் இல்லை என்றும் அவர் எச்சரித்தார்.

தேசியப் பட்டியல் மூலம் எம், பியாக ருக்மன் மறுப்பு

கொழும்பு, மே 31

தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக வருவதற்கு முன்னாள் டெடிகம எம். பி. ருக்மன் சேனநாயக்கா மறுத்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகுவதையே திரு. ருக்மன் சேனநாயக்கா விரும்புவதாக ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேதுங்காவுக்கு தெரியப்படுத்தி இருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ஜே. ஆர். ஜெயவர்த்தனா இருந்தபோது, அக்கட்சியில் இருந்து ருக்மன் சேனநாயக்காவும் டாக்டர் காமினி விஜேசேகராவும் விலகி எக்சத் ஜாதிக பக்ஷய என்ற கட்சியை ஆரம்பித்து அதன் தலைவர், செயலாளராக இருவரும் முறையே செயலாற்றி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மந்திகை ஆஸ்பத்திரியில்

எக்ஸ்-றே கருவி இருந்தும் படம் எடுக்கமுடியாத நிலை

வடமராட்சி, மே 31

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் உள்ள எக்ஸ்-றே கருவியில் கதிர் புகைப்படம் எடுக்க உரியவர் ஒருவர் நியமிக்கப்படாமையால் அங்கு எக்ஸ்-றே படம் எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக உரிய தேர்ச்சி பெறாதவர்கள் எக்ஸ்-றே கதிர் இயந்திரத்தை இயக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. (எ-173)

வாரம் 20 தபால் பொதிகள் கப்பலில் கொழும்புக்கு!

செஞ்சிலுவைச் சங்கம் இணக்கம்

''பினாம்பயான்'' கப்பல் மூலம் வாரந்தம் இருபது தபால் பொதிகளை பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து எடுத்துச் செல்வதற்கு செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு இணங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, வாராந்தம் சேகரிக்கப்படும் தபால்கள் அனைத்தும் ''பினாம்பயான்'' கப்பல் மூலம் அனுப்பி வைக்கக் கூடியதாக இருக்கும் என்று யாழ் பிரதம தபால் அதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இதுவரை 'பினாம்பயான்' கப்பல் மூலம் வாராந்தம் பதினைந்து தபால் பொதிகளே அனுப்பப்பட்டு வந்தன.

புதிய ஏற்பாட்டுக்கு இணங்க கடந்த வெள்ளிக்கிழமை சேகரிக்கப்பட்ட தபால்கள் அனைத்தும் 17 பொதிகளில் அனுப்பி வைக்கப்பட்டன. (எ-162)

நகை திருட்டு

மிருசுவில் பகுதியில் வீடொன்றில் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் அண்மையில் திருடப்பட்டுள்ளன.

இத் திருட்டு தொடர்பாக சாவகச்சேரி காவல் பணிமனையில் செய்த முறைப்பாட்டை அடுத்து காவல்துறையினர் நகைகள் திருடியவரை கைது செய்ததுடன் நகைகளையும் மீட்டெடுத்துள்ளனர். (ஓ-117)

வீரச்சாவு

யாழ்ப்பாணம்' மே. 31

திருமலை மல்லிகைத்தீவு என்னுமிடத்தில் கடந்த சனி இரவு 7. 30 மணியளவில் படையினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த லெப்டினன்ட் லவன் அல்லது கிள்ளிவளவன் என்ற போராளி வீரச்சாவடைந்தார் (உ-5)

ஹெலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான் மீண்டும் கடலில் பாய்ந்து நீந்த ஆரம்பித்தேன், அப்போது கட்டுமரத்தில் எங்களுடன் வந்த மூவரை கடற்படையினர் தமது படகில் ஏற்றிக் கொண்டிருந்தனர்.

வேகமாக நீந்திய நான், கரையை வந்தடைந்தபோது எம்முடன் தொழிலுக்கு வந்த எண்மரில் இருவர் கட்டுமரத்துடன் கரைக்கு வந்து சேர்ந்தனர்.

ஆனால் என்னுடன் கடலில் பாய்ந்து நீந்திய மற்றைய இருவரும் என்னவானார்கள் என்பது தெரியவில்லை — என்றார். உ-15)

இம்முறையும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் குறித்து பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் புதிய மாணவர்களின் பெற்றோரும், சம்பவம் இடம்பெறும் சுற்றாடலைச் சேர்ந்தோரும் விசனம் தெரிவித்ததையும்—

உரியவர்கள் நடவடிக்கை எடுக்காதது குறித்து கவலை வெளியிட்டதையும் அவதானிக்க முடிந்தது. (உ)

இன்ரறக்ட் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ் றோட்டறிக் கழகத்தின் இன்ரறக்ட் கழகங்களின் செயல் திட்டங்களை ஆராய்வதற்கான கூட்டம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியில் பி.ப. 4 மணிக்கு நடைபெறவிருக்கும் இக் கூட்டத்திற்கு இன்ரறக்ட் கழகங்களின் தலைவர்களும் செயலாளர்களும் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ)

பாடசாலைகளில்

அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன் பிற்பகல் 2 மணி முதல் நிலாவெளி விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி சி. சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்கானை கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-5-12)

கோமாரி சென்று ருகுணு வருகிறது

யாழ்ப்பாணம், மே 31

வர்த்தகத் திணைக்களத்துக்கான ஒரு தொகுதி பொருள்களுடன் 'ருகுணு' கப்பல் நாளை மாலை காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்தடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் காலை அந்தக் கப்பல் அங்கிருந்து பருத்தித்துறைக்கு வந்து பொருள்களை இறக்கும்.

இதேவேளை—

பொருள்கள் இறக்கும் வேலைகளை முடித்துக் கொண்டு ''கோமாரி'' கப்பல் நேற்று இங்கிருந்து புறப்பட்டுச் சென்றது. (உ-5)

இருமனம் இணைந்தாலே திருமணம்— அது
சீதனம் இணைந்ததென்றால் வெறும் மணம்

கண்ணீர் அஞ்சலி

அம்பிகாபதி பாலசுந்தரம்

(தலைவர், உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம்,
முன்னைநாள் பொறுப்பதிகாரி மானிப்பாய் பட்டினம்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை)

பொங்கும் மகிழ்வுடனே
முன்னைப் பொறுப்பதிகாரியாய்
எங்கள் சபைதனில் ஏற்றமுடன் சேவை செய்தாய்
சங்கத் தலைவனாய் சாதனைகள் பல செய்தாய்
பங்கமிலாப் பாலசுந்தரமே எங்குநீ சென்றனையோ

ஆத்மாசாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்போமாக

செயலாளரும், ஊழியர்களும்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.

[31179]

மரண அறிவித்தல்கள்

திருமதி இராசம்மா ஐயம்பிள்ளை

(காரைநகர்)

காரைநகர் சிதம்பராமூர்த்தி வேணியடி, புதுறோட்டைச் சேர்ந்த திருமதி இராசம்மா ஐயம்பிள்ளை 30-05-94 ஆம் திகதி வட்டுக்கோட்டையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பரமு ஐயம்பிள்ளை (மலேயன் பென்சனர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற துரைராசசிங்கம், அற்புதம், குலவீரசிங்கம், பாலசிங்கம், பூபாலசிங்கம் ஆகியோரின் தாயாரும், நீலாவதி, காலஞ்சென்ற மார்க்கண்டு, சுசீலா, தவமணி, கமலாம்பிகை, ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 31-5-94 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு "P. M. சங்கரப்பிள்ளை வாசம்" சங்கரத்தை வீதி, வட்டுக்கோட்டையில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 11.00 மணியளவில் வட்டுக்கோட்டை வழுக்கையாற்று மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ. பாலசிங்கம்
(மகன்)
பயிரிக்கூடல், காரைநகர்.

"P. M. சங்கரப்பிள்ளை வாசம்"
சங்கரத்தை வீதி,
வட்டுக்கோட்டை.

(31185)

சிவஞானம் சிவக்கொழுந்து

சிதம்பரம் ஸ்ரீ பரராசசேகரமகாராசாவின் கட்டளை மடத்தினதும், நல்லூர் கள்ளியங்காடு முக்குறுணிப்பிள்ளையார் தேவஸ்தானத்தினதும் பரிபாலகரும், நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான ஓதுவாரும் ஆகிய யாழ்ப்பாணம் கள்ளியங்காடு சிவஞானம் சிவக்கொழுந்து 30-05-94 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவஞானம் ஓதுவாரினதும் செல்வநாயகியினதும் அருமை மகனும், சிதம்பரம் சிவபுரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஞானப்பூங்கோதையின் அன்புக்கணவரும், திருமதி கனகாம்பிகை, திருமதி பாலசுந்தரி, திருமதி மதுரவசனி (சென்னை) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. மா. கனகசபை (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம்), திரு. ஆ. கனகசபை, திரு. ச. சிவகுமார் (சென்னை) ஆகியோரின் அன்பு மாமனாரும், முரளீதரன் (சென்னை), மாதுமை திருத்தணிகேசன், சண்முகதாஸ், சிவஞானம், சிவரஞ்சினி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான திருமதி இரத்தினவல்லி, திருமதி பரிபூரணம், திருமதி உமையவல்லி, திருமதி விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிதம்பரம் சிவபுரி, திரு. முத்தம்பலநாதன் அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் செவ்வாய்க்கிழமை 31-05-94 நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் காலை 9 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மா. கனகசபை
(மருமகன்)

முக்குறுணிப் பிள்ளையார் கோவில் வீதி,
கள்ளியங்காடு, யாழ்ப்பாணம்.

(31183)

பொன்னையா மரகதம்

(புங்குடுதீவு-6)

திருமதி பொன்னையா மரகதம் 13-5-94 வெள்ளிக்கிழமை புங்குடுதீவில் காலமானார்.

இவர் ஆறுமுகம் சின்னத்தங்கம் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற பொன்னையாவின் மனைவியும், மகாதேவனின் (கொழும்பு) அன்புத்தாயாரும், பவானி (சோதி)யின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற குழந்தைவேலு, காலஞ்சென்ற பரமனாச்சி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கந்தையா (முன்னாள் வர்த்தகர் தெரணியகலை), சரிவலோகலெட்சுமி. கனகம்மா, கணபதிப்பிள்ளை, ஆகியோரின் மைத்துனியும், திருமதி தம்பிப்பிள்ளை மகேஸ்வரி, புவனேஸ்வரி, பரமேஸ்வரன், விக்கினேஸ்வரன் (கமலாஸ்ரோர்ஸ் தெகியோவிற்ற) ஆகியோரின் சிறியதாயாரும் துஷ்யந்தி, குமுதினி, சாருகாஹாசன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13-05-1994 இல் புங்குடுதீவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. க. திருலோகநாதன்,
(ஸ்ரீசக்தி வர்த்தக நிலையம்,
யாழ்ப்பாணம்).

699/2, கே. கே. எஸ். வீதி,
இந்துக் கல்லூரிக்கு அருகில்,
யாழ்ப்பாணம்.

[31176]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 31-05-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

அமரர் நித்தியகல்யாணி ரவீந்திரன் அவர்களின்

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

அன்புடையீர்!

17-05-1994 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குலவிளக்கு அமரர் நித்தியகல்யாணி ரவீந்திரன் அவர்களின் அந்தியேட்டி 31-05-1994 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு வில்லூன்றி தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியம் 01-06-1994 புதன்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். அவ்வமயம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து எமது குலவிளக்கின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
P. ரவீந்திரன் (கணவர்)
N. K. பத்மநாதன் குடும்பத்தினர்
நாதஸ்வரம்
K, கணேசன் குடும்பத்தினர்
நாதஸ்வரம்

199/4, இல்லர் லேன்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:-

மிகக்குறுகிய கால இடைவெளியில் இதனை செய்து முடிக்க வேண்டியிருப்பதால் இதனையே அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(31186)

2ஆம் ஆண்டு நினைவலைகள்

கனகசபை பரராஜசிங்கம்

(பிள்ளையார்)

மலர்வு: 24-03-1938
உதிர்வு: 24 05-1992
திதி 31-05-1994

இரண்டு ஆண்டு சென்றாலும் ஆறிடுமோ — என் மனம். எண்ணாத நேரத்தில் எம்மை விட்டுப் பிரிந்து எம்மைத் தவிக்கவிட்டு ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே ஆலமரம் சாய்ந்ததுபோல் சாய்ந்துவிட்டீரா துடிக்கின்றோம் ஐயா! மாண்டவர் மீண்டும் வருவதில்லை கோடிகளாண்டு போனாலென்ன உங்கள் நினைவின் சோகம் மாறுமா. உங்கள் நினைவுடன் சித்தம் கலங்கியே நிற்கையிலும் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கண்ணீர் அஞ்சலிகளுடன் நினைவுகூரும்
மனைவி, மக்கள், மருமகன், பேர்த்தி

ந. ராஜன்,
இல. 301, சந்தோஷம் சாலை,
(கஸ்தூரியார் வீதி),
யாழ்ப்பாணம்.

(31184)

31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 12 — 02 — 1911
உதிர்வு: 01 — 05 — 1994

திருமதி மனோன்மணி சண்முகம்

(அத்தியடி)

காக்கை கரைந்தது அன்று அஸ்தியை
காக்கை தீவில் கரைப்பதற்கோ அம்மா
மகறஒலி கேட்டேனும் மக்கள்
பார்க்க வருவர் என்றெண்ணி
நிறைவேறா ஆசையுடன்
நீறாகப் போனீரோ அம்மா
சிறைப்பட்டவாழ்க்கை இனிப்போதுமென்றெண்ணி
இறைகழல் ஒன்றையே இறுகப்பற்றினீரோ அம்மா!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

ச. சற்குருநாதன்,
(மகன்)
சுந்தரமடம்,
யாழ்ப்பாணம்.

(31182)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று பிற்பகல் முத்துத்தம்பி ம. வி. மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பின்வரும் அணிகள் மோதுகின்றன.

★ 17 வயது பிரிவு:- சென் ஜோன்ஸ் எதிர் சென்ஹென்றீஸ்

★ 19 வயதுப் பிரிவு:- புத்தூர் சோமஸ்கந்தா எதிர் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம. வி. (மூன்றாம் இடத்திற்கான ஆட்டம்)

★ ★ ★

யாழ்ப்பாண கல்வி வலயம் — 1 பாடசாலைகளுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் 2.45 மணி முதல் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

சுண்டிக்குளி மகளிர்
கல்லூரியில்

★ 17 வயதுப் பிரிவு:- நாவாந்துறை றோ. க. எதிர் கனகரத்தினம் ம. ம. வி. மற்றும் கொக்குவில் இந்து எதிர் கன்னியர்மடம் தமிழ் ம. வி.

★ 19 வயதுப் பிரிவு:- பெரியபுலம் ம. வி. எதிர் கன்னியர்மடம் தமிழ் ம. வி.

கைதடி நவீல்ட்
பாடசாலையில்

★ 17 வயதுப் பிரிவு:- சாவகச்சேரி மகளிர் எதிர் புங்குடுதீவு ம. வி. மற்றும் சாவகச்சேரி இந்து எதிர் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை

★ 19 வயதுப் பிரிவு:- வேலணை துரைச்சாமி ம. ம. வி. எதிர் சாவகச்சேரி இந்து

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் "உதயன்" கிண்ணத்திற்காக கழக மைதானத்தில் நடத்திவரும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 4 45 மணி:- அல்வாய் நண்பர்கள் வி. க. எதிர் கலட்டி ஐ. வி. க.

★ 4 00 மணி:- அண்ணா இலையடி வி. க. எதிர் கொலின்ஸ் வி. க. "ஏ"

யாழ். ஐங்கரன் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 1.00 மணிக்கு ஆரம்பமாகும் காட்சி ஆட்டத்தில் ஐங்கரன் வி. க. அணியை எதிர்த்து தபாலக அணி மோதும்.

பிற்பகல் 3 30 மணிக்கு ஆரம்பமாகும் இறுதியாட்டத்தில் வேளாங்கண்ணி வி. க. அணியை எதிர்த்து சுண்டுக்குளி பாரதி வி. க. அணி மோதும். இந்த ஆட்டம் 20 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்டதாக இருக்கும்.

★ ★ ★

தீவக பிரதேச செயலகத்தினால் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும். புங்குடுதீவு சிவலைப்பிட்டி வி. க. அணியை எதிர்த்து புங்குடுதீவு பாரதி வி. க. அணி மோதும்.

★ ★ ★

அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக்கழகம் யாழ் கனகரத்தினம் ம. ம. வி. மைதானத்தில் நடத்திவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3. 30 மணி:- திருவள்ளுவர் வி. க. அணி எதிர் விக்ரறி வி. க. அணி

★ 4. 30 மணி:- அரியாலை வி. க. "ஏ" எதிர் சிற்றம்பலம் வி. க. "பி" அணி

(உ-20)

இன்று தொடர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுவரொட்டிகளை பொருத்தமான இடங்களில் ஒட்டுவதுடன், துண்டறிக்கைகளை அனைவரும் படிக்கத்தக்கதாக செய்து பெருமளவு நிதி சேகரித்து உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மைலாப்பூர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மைலாப்பூர் தொகுதியில் கட்சிகள் பெற்ற வாக்குகளின் விபரம் வருமாறு:-

அ. தி. மு. க — 40,756
தி. மு. க — 35,021
காங்கிரஸ் — 12,436
ம. தி. மு. க. — 10,471

இதற்கிடையில்—

தமிழ்நாட்டில் பெருந்துறை மற்றும் மைலாப்பூரில் நடந்த இடைத் தேர்தல்களை ரத்துச் செய்யும்படி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தேர்தல் ஆணையாளரைக் கோரியிருக்கிறார். இந்த இடைத் தேர்தல்களிலும் பல முறைகேடுகள் இடம்பெற்றதாக அவர் குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

இன்று

யோகர் சுவாமிகளின் ஜெயந்தி விழா இன்று நல்லூர் தேரடியில் கொண்டாடப்படுகின்றது சிவதொண்டன் நிலையத்தில் மகேசுவரபூசையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

தென்மராட்சிப் பகுதியில் போசாக்கு வார விழா நடத்துவது தொடர்பான கூட்டம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இன்று காலை 8 30 மணியளவில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

(உ-117)

யாழ். ஸ்ரீதரில்
இன்று முதல்
புரூஸ்லி நடித்த

GAME OF DEATH

தினசரி பி. பகல் 4 00 மணி
மாலை 6 00 மணி சனி, ஞாயிறு
காலை 10 30 மணி, பி. பகல் 4 00 மணி
மாலை 6 00 மணி
தினசரி பி. பகல் 2.30 மணிக்காட்சி மட்டும்

ஏப்ரல் - 94 ஒளிவீச்சு

[சி/8356]

மரண அறிவித்தல்கள்

திருமதி லூயிஸ் குணமணி யோசவ்

(லூ)

திருமதி லூயிஸ் குணமணி யோசவ் 29-05-94இல் காலமானார்,

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் யோசவின் (ஓய்வு பெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்) அன்பு மனைவியும் அன்ரூ(U. K), அலோய் (ஆனந்தன்-இனோக்கா மோட்டோர்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஐறீன் (U. K.), சாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், லக்ஷ்மன்(U. K), வெஸ்லி (U K), கிருஷாந்தி(U.K.), இனோக்கா, கனிஷா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31-05-94) பி. ப. 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கச்சேரி-நல்லூர் வீதியிலுள்ள புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இரங்கல் பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்,

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
யோ. அலோய்
(ஆனந்தன்-மகன்)

28/3, ஆசீர்வாதப்பர் வீதி,
கச்சேரி, நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(31174)

சங்கரப்பிள்ளை அருளானந்தம்

(காரைநகர்)

காரைநகர், கோவளத்தைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாண கல்வித் திணைக்கள ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞருமாகிய சங்கரப்பிள்ளை அருளானந்தம் காலமானார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், சர்வேஸ்வரன் (பாபு) (விரிவுரையாளர், சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), ஞானேஸ்வரன் (ரமணன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரூபியின் அன்பு மாமனாரும், துஷியின் அன்புப் பேரனாரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரினதும், பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற கட்டிடத் திணைக்கள பரிசோதகர்), இராஜேஸ்வரி ஆகியோரினதும் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. ஞானேஸ்வரன் (ரமணன்)
(மகன்)

217/1, கடைச்சுவாமி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(31181)

OBITUARY

Mrs. LOUIS KUNAMANY JOSEPH

(LOU)

Mrs. Louls Kunamany Joseph beloved wife of late Francis Joseph (Retired Inspector of Police) loving mother of Andrew (U. K.). Aloy (Ananthan-Inoka Motors). Mother-in law of Irene (U. K.), and Shanthi, much loved Grand-Mother of Lakshman, Wesley, Chrishanthi all of U. K. Inoka and Kanisha expired on 29-05-1994.

The remains will be removed for interment to St. Mary's Burial Grounds after offering Holy Mass at St. Benedict's Church, Kachcheri - Nallur Road. Jaffna, about 3-00p.m. on 31-05-1994.

Friends and Relations please accept this intimation.

J. ALOY,
(Ananthan-Son).

28/3, St Benedict's Road,
Kachcheri-Nallur Road,
Jaffna.

[31175]